23rd July 1957]

SRIMATHI T. N. ANANDANAYAKI : இப்படி விபத்துக்களுக்குள்ளான தொழிலாளர் குடும்பத்திற்கு ஏதாவது நஷ்ட ஈடு அரசாங்கம் கொடுத்ததா? அப்படிக் கொடுத்திருந்தால், எவ்வளவு கொடுக்கப்பட்டது ? எவ்வளவு குறுகிய காலத்தில் அந்த நஷ்ட ஈட்டுத் தொகை கொடுக்கப்பட்டது ? 10–10 a.m.

THE HON. SRI V. RAMIAH : பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டிருக்கிறது. 1955–56-ம் வருஷத்தில் ஏற்பட்ட விபத்துக்களுக்காக "ஒர்க்மென்ஸ் காம்பென்சேஷன்ஸ்" சட்டத்தின் பிரகாரம் 2,400 ரூபாயும், 1956–57-ம் வருஷத்தில் ஏற்பட்ட விபத்துக்களுக்காக 1,800 ரூபாயும் நஷ்ட ஈடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Handloom Weavers

* 205 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the amount of loan granted to the Handloom Weavers during 1955–56 and 1956–57 in Tirunelveli district;

(*b*) the value of cloth produced from the district in 1955–56 and 1956–57 ;

(*c*) the value of cloth produced from Tirunelveli, Mellappalayam, Ambasamudram, Kadayanallur and Tenkasi taluks respectively ;

(*d*) of this how much was produced through co-operative societies and how much by Master weavers; and

(*e*) the quantity and value of cloth in stock at present and the period during which the stock accumulated?

THE HON. SRI R. VENKATARAMAN : The answer [a] is placed on the table of the House.

SRI K. SATTANATHA KARAYALAR : சுமார் மூன்று மாத காலத்திலே, ஏழு லட்சத்திற்கு அதிகமான ரூபாய்கள் பொருமான "ஸ்டாக்" அங்கே தேக்கம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு, இதைப்பார்க்கிலும் மிக அதிகமாக அங்கு தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன என்று மந்திரி அவர்கள் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்தக் காலத்தில், திருநெல்வேலி ஜில்லாவில் மாத்திரம் அல்ல, சென்னை ராஜ்யம் பூராவிலும் ஓரளவு கைத்தறி நெசவுத் துணி தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. மில் துணிகளும் தேக்கம் ஏற்பட்டிருந்திருக்கிறது. ஆனால், இப்பொழுது அந்தக் கஷ்டமான நிலைமை இல்லை என்று கலெக்டரிடமிருந்து ரிபோர்ட் வந்திருக்கிறது.

(* 206 question was answered together with starred question No. 200)

Availability of copper and gold in Salem district

* 207 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have taken any steps to explore the availability of copper, gold, etc., in Pachamalai and Pavalamalai areas in Salem district?

THE HON. SRI R. VENKATARAMAN : The Department of Geological Survey of India which conducted a survey of the areas in question did not come across any occurrence of gold or

---

[a] Printed as Appendix II on pages 274–275 infra.

copper in the area. The Department however detected a six-mile long band of iron ore north of Ladapuram, and a few shorter ones near Kanavoy and Elambalar in the Pachamalai.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்திய சர்க்காருடைய "மினரல்" கண்டு பிடிப்பு இலாகாவினர் இவைகளை ஆராய்கிற காரணத்தால் பொதுவாகவே அகில இந்தியாவில் வேறு சில இடங்களில் இந்தப் பொருள்கள் மிகுதியாகக் கிடைக்கின்ற காரணத்தால், அங்கு மட்டுமே இவைகளை எடுப்பதற்கான முயற்சியில் ஆர்வங் காட்டி, குறைவாகக் கிடைக்கும் பகுதிகளில் அலக்ஷியம் செய்து விடுகிறார்கள் என்ற கருத்துத் தோன்ற இடம் இருக்கிறது. ஆகவே, சென்னை சர்க்கார் தனியாகவே ஒரு இலாகா ஏற்படுத்தி, இக்குறைக்கு இடமின்றி கவனித்துக் கொள்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினருடைய கேள்வியில் இருக்கிற கருத்தை சர்க்கார் ஒத்துக்கொள்ளவில்லை. இருந்தாலும், கனம் அங்கத்தினர் கேட்கின்றபடியினால் சொல்கின்றேன். இந்த 'சர்வே'-ஐ நடத்தினவர்கள் டாக்டர் எம். எஸ். கிருஷ்ணன் அவர்களும் ஸ்ரீ என். கே. என். அய்யங்கார் அவர்களும்தான்.

SRI S. NAGARAJA MONIGAR : கோலாருக்குச் சமீபமாயுள்ள ஹோசூர் தாலூகாவின் வட பகுதியிலும், கிருஷ்ணகிரி தாலூகாவின் வட பகுதியிலும் தங்கம் இருப்பதன் அறிகுறிகள் தென்படுகின்றன என்பது வாஸ்தவமா ? பச்சை மலை, பவளமலை ஆகிய இடங்களைக் காட்டிலும் இந்த இடங்களில்தான் அதிகமாக அவைகள் கிடைக்கின்றன என்பதையும் அரசாங்கம் கவனிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : "ஜியாலாஜிகல் சர்வே" பிரகாரம் இந்த இடத்தில் செம்பு, தங்கம் அகப்படவில்லை என்று தான் தெரிகிறது.

Plantation workers

* 208 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have effected any settlement during April 1956 between the Plantation Workers' representatives and the managements with regard to wages and other amenities for the workers; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) With a view to bringing about an amicable settlement in the dispute regarding the implementation of the Plantation Award, the Minister for Home, the then Minister in charge of Labour, held during 1956, a series of discussions with the representatives of the estate-owners and the employees. As the parties were unable to come to a settlement themselves, certain terms were suggested by the Government as the basis for a settlement. As a section of labour did not agree to the suggestion, no final settlement has been effected and ratified. However, in estates in which labour has agreed to the terms suggested by the Government, the managements have been persuaded to implement those terms.